விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 23 · வெள்ளிக்கிழமை (08.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 254

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# ஜே.வி.பியுடன் ஜனாதிபதி இன்று முக்கிய சந்திப்பு!

## அரசில் இணைவது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் ஜே.வி.பியினருக்குமிடையில் இன்று முக்கிய பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. அரசாங்கத்தில் இணைவது குறித்த ஜே.வி.பியின் யோசனைகள் குறித்து இன்றைய அரசியல் சந்திப்பில் இறுதி முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.**

ஜே.வி.பிக்கும் ஜனாதிபதி தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையிலான முக்கிய பேச்சுவார்த்தை இன்று நடைபெறவுள்ளது.

அரசாங்கத்தில் இணைவதற்கு தமது 20 யோசனைகளுக்கு அரசாங்கம் உரிய பதிலை வழங்கவேண்டுமென ஜே.வி.பி.கோரியிருந்தது. அவ் யோசனைகளில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை தடைசெய்வது உட்பட நான்கு யோசனைகளை ஏற்றுக்கொள்வதில்லை என சிறிலங்கா சுதந்திரக்கட்சி அறிவித்திருந்தது.

இதையடுத்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏற்றுக்கொள்ள முடியாது என்ற யோசனைகளுக்கு மாற்று யோசனைகளை ஜே.வி.பி. முன்வைத்திருந்தது.

இந் நிலையில் ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையிலான முக்கிய பேச்சுவார்த்தை இன்று (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான இராணுவ உதவிகளை அதிகரிக்க பாகிஸ்தான் அரசாங்கம் முடிவு

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கும் இராணுவ உதவிகளை அதிகரிக்கவுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சின் செயலாளர் கமல்ஸ் சாவை மேற்கொள்காட்டி இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் இலங்கைக்கு வழங்கிவரும் இராணுவ உதவிகளை எதிர்வரும் மாதங்களில் மேலும் அதிகரிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு நாடுகளுக்கிடையில் நிலவும் நட்புறவின் பலனாக இலங்கைக்கு போர்த்தளபாடங்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் நேற்று இருவர் சுட்டுக்கொலை

கரணவாய் பகுதியில் புகைப்படப்பிடிப்பாளர் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்டவர் கரணவாய் மேற்கைச் சேர்ந்த சூரியகுமார் அருமைராஜ் (வயது 25)என தெரிவிக்கப்பட்டது.

இவரின் வீட்டு வாசலில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் நேற்றுக் காலை 9 மணியளவில் சுடப்பட்ட நிலையில் மந்திகை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட வழியில் அவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வதிரியில்வைத்து நேற்று மாலை 5 மணியளவில் பெண் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். எனினும் சடலம் அடையாளம் காணப்படவில்லை. (ச-5,7)

## பாடசாலை பகிஷ்கரிப்பை நிராகரிக்குமாறு சுதந்திர மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

பாடசாலைப் பகிஷ்கரிப்பை நிராகரிக்குமாறு சுதந்திர மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக அவ் அமைப்பு நேற்று மாலை ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நாங்கள் சுதந்திரமாகவே கல்வியைத் தொடர்ந்து வந்தவர்கள். ஆனாலும் போர்ச்சூழல் என்பது எமது கல்வி கற்கும் சுதந்திரத்தின் மீது பாரிய சுமைகளை சுமத்தி வருகின்றது.

அண்மைக்காலப் போர் அனர்த்தங்களில் சிக்குண்ட நாம் சுதந்திரமாக கல்வியைத் தொடர முடியாது தவித்திருந்தோம். மறுபடியும் ஒரு குழப்பம். மறுபடியும் எமது கல்வி கற்கும் சுதந்திரத்தின் மீது தடை. யாழ். மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் வெளிவந்திருக்கும் அறிவிப்பு எங்களது நிம்மதியான வாழ்விற்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

## வட பகுதி அவலங்கள் குறித்து செஞ்சிலுவைச் சங்கம் கவலை

இலங்கையின் வடக்கில் ஏற்படுத்தப்பட் டிருக்கும் மனித அவலங்கள் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.ஆசிய பசுபிக் பிராந்திய சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதி ரியோட் டோமெய்ஸ்டர் தனது இலங்கைப் பயண இறுதியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வார காலமாக வன்னிப் பிரதேசமானது இதர பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் இரு தரப்பினரது தடைகளால் அத்தியாவசியப் பொருட்கள் சென்றடையவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கான அனைத்துச் சேவைகளையும் இரு தரப்பும் அனுமதிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இதேவேளை பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு அனைத்துத் தரப்பினரும் மனிதாபிமானத்துடன் உதவ வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார். (ச-5)

## புனர்வாழ்வுக்கழக பிரதிநிதிகளுடன் நோர்வே தூதரக அதிகாரிகள் சந்திப்பு



இலங்கைக்கான நோர்வே தூதரக அதிகாரிகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் சந்தித்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நடுவப் பணியகத்தில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இச் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர்,பிரதித் தூதுவர் கராஸ்ட் ஸ்ரெட், இரண்டாம் நிலைச் செயலர் ரொம் மைக்ஸ் கொக் ஆகியோர் கொண்ட குழுவும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் தரப்பில் தலைவர் வீ.சிவனடியார், திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, பொறியியலாளர் றமணன் ஆகி யோர் இச் சந்திப்பில் பங்கேற்றனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் தொடர்பில் அரசு கவனம் செலுத்துகிறது

### பாலித கொஹன்ன தெரிவிப்பு

(கொழும்பு)

மோதல்கள் தொடந்தாலும் அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பாக கவனம் செலுத்தி வருவதாக சமாதானச் செயலக பணிப்பாளர் பாலித கொஹன்ன தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் டபிள்யூ எம்.கருணாதாஸ் எழுதிய சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்ற நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மோதல்களால் இடம்பெயர்ந்தவர்கள் சிறுவர்,போராளிகள் தொடர்பாக அரசாங்கம் தீவிரமாக செயற்படுகின்றது. இவ்வாறான நிலைமையுள்ள (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசாங்கத்துடன் பேசுவதற்காக ஐவர் கொண்ட குழுவை நியமிக்குக

## ரணிலுக்கு ஜனாதிபதி கடிதம்





அரசாங்கத்துடன் இணைந்து கௌரவமான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக எதிர்காலத்தில் விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஐவர் கொண்ட குழுவின் பெயர் விபரங்களை அறிவிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய தேசியக் கட்சிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பொது வேலைத் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தோடு இணைந்து செயற்படுவதற்கு முன்வருமாறு நாம் விடுத்த அழைப்பிற்கு ஐக்கிய கட்சி சாதகமான பதிலை வழங்கியமைக்காக முதலில் நன்றி கூறுகின்றோம்.

அதேபோல் கௌரவமான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக எதிர்காலங்களில் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டியிருக்கின்றது.

அதற்காக அரசாங்கத் தரப்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அக் குழுவுடன் இணைந்து தங்களின் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க ஐ.தே.க சார்பில் ஐவரின் பெயர் விபரங்களை சிபார்சு செய்யவும்.

ஐ.தே.கவினால் சிபார்சு செய்யப்படுகின்ற குழுவினர் மேற்படி விடயம் குறித்து அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினருடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்துவர் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## உலர் உணவு விநியோகம்

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறிவித்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெயர்ந்தவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் உலர் உணவு நிவாரணங்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலர்களுக்கு அரச அதிபர் வலியுறுத்தியுள்ளார். இடம்பெயர்ந்த மக்கள் தமக்குரிய உலர் உணவு நிவாரணப் பொருட்களை உடனடியாக பெறுமாறு கோரப்பட்டுள்ளது. (ச-5)

## ஆறு மேல் நீதிமன்றங்களை புதிதாக அமைக்க முடிவு

நாட்டில் புதிய ஆறு மேல் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன. நீதித் துறையில் ஏற்படும் தாமதங்களைத்தவிர்ப்பதற்காகவும் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்கவும் இந் நடவடிக்கையை எடுத்துள்ளதாக நீதிமன்றம் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார். இவ்வருட இறுதிக்குள் ஆறு மேல் நீதி மன்றங்களையும் ஆரம்பிப்பதற்குதிட்டமிடப்பட்டுள்ளது. (ச)

## உரிய நேரத்திற்குக் கடமைக்குச் செல்ல அரச உத்தியோகஸ்தர்களுக்குப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம், வடமராட்சி மற்றும் தீவகப் பிரதேசங்களில் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் தளர் த்தப் படுவதால் அனைத்து அரச ஊழியர்க ளும் வழமையான அலுவலக நேரத்திற்கு கடமைக்குச் செல்லுமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

தூர இடங்களிலிருந்து கடமைக்குச் செல்லும் அரச ஊழியர்கள் பிற்பகல் பஸ் நேரத்திற்கு அமைய கடமையை நிறைவு செய்யுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை தென்மராட்சி பிரதேசத்திலிருந்து வேறு இடங்களுக்குச் செல்லும் அரச ஊழியர்கள் ஊரடங்கு தளர்த்தப்படும்போது இயங்கக் கூடிய வகையில் நேரகாலத்துடன் கடமைக்குச் செல்லுமாறும் பிற்பகல் பஸ் சேவை நேரத்திற்கு அமைவாக கடமையை நிறைவு செய்யுமாறும் அரச அதிபர் க.கணேஷ் கேட்டுள்ளார். (ச-5)

## பட்டப்பகலில் துணிகரத் திருட்டு

### கொக்குவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் நேற்றுப் பட்டப் பகலில் ஆறு லட்சம் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

கொக்குவில் கருவேலடி ஒழுங்கைக்கு முன்னால் உள்ள வீடொன்றிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று மதியம் 12 மணியளவில் வீட்டில் ஒருவரும் இல்லாத நேரத்தைப் பயன்படுத்தி வீட்டினுள் புகுந்த திருடர்கள் இத் துணிகரச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வீட்டிலிருந்த நகைகள், உடுபுடைவைகள் மற்றும் பெறுமதியான பொருட்கள் என்பனவே திருடப்பட்டுள்ளன. இது குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ச)

## மொனராகலை குகையில் இரு சடலங்கள் மீட்பு

மொனராகலை தனமல்வில பொலிஸ் பிரிவிலுள்ள தேவகிரி கந்தகம என்ற இடத்தில் குகை ஒன்றுக்குள் கிடந்த சடலங்கள் இரண்டை பொலிஸார் மீட்டுள்ளனர்.

விறகு வெட்டக் காட்டுக்குச் சென்ற சிலரே மிகவும் பழுதடைந்த நிலையில் கிடந்த இச் சடலங்கள் தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

குறிப்பிட்ட இரண்டு சடலங்களுக்குரியவர்களும் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டு தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளதாக மொனராகலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வலஸ்முல்லையைச் சேர்ந்த நிஹால் (வயது-31), தனமல்விலையைச் சேர்ந்த சுசந்த புஸ்பகுமார் (வயது-35) ஆகிய இருவரே இவ்வாறு வெட்டியும் தீயிட்டும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இவர்கள் இருவரும் கடந்த 2 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தனமல்வில பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் பதியப்பட்டுள்ளது. (ச)

## வேப்பமரத்திலிருந்து பால் வடியும் அதிசயம்



(மட்டக்களப்பு)

புதிய காத்தான்குடி மட்டக்களப்பு கல்லடி பகுதியில் வேப்பமரம் ஒன்றிலிருந்து பால் வடியும் அதிசயம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை முதல் வேப்பமரத்திலிருந்து பால் வடிந்து கொண்டிருந்தமையால் பெருந்திரளான மக்கள் இதனைப் பார்வையிட்டனர்.

கல்லடிப்பாலத்திற்கு முன்னால் உள்ள வெற்று வளவிலுள் உள்ள வேப்பமரத்தின் கிளை ஒன்றிலிருந்து பால் வடிந்துள்ளது.

இதனை கடவுளின் செயல் என நம்பிய பக்தர்கள் குறித்த வேப்பமரத்தின் கீழ் கற்பூரம், ஊதுபத்தி கொளுத்தி வழிபட்டனர்.

வேப்பமரத்திலிருந்து வடியும் பால் இனிப்பாக இருப்பதாக சுவைப்பவர்கள் தெரிவிக்கின்றனர். மரத்துக்குக் கீழ் குழுமி இருந்த மக்கள் சொட்டுச் சொட்டாக வடியும் பாலை பக்தியுடன் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## மின்சாரத்தை சேமிக்குமாறு இராணுவம் வேண்டுகோள்

இரவு நேரங்களில் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் கேட்டுள்ளது.

இரவு 7 மணி முதல் 9 மணிவரையான நேரத்தில் குறைந்தது இரண்டு மின்குமிழ்களையாவது அணைத்து மின்சாரத்தைச் சேமிக்குமாறு கேட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்றிரவு ஊடக அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது. (ச-5)

## அரிசிக்குத் தட்டுப்பாடு

யாழ்.குடாநாட்டில் தற்போது அரிசிக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக சீனி மற்றும் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு நிலவியது.

எனினும் அண்மைய சில நாட்களில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரிசி ஒருகிலோ 50 ரூபா முதல் 60 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. சீனி 160 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (ச)

## தமிழக சட்டமன்றத் தீர்மானத்திற்கு மகேஸ்வரன் எம்.பி. நன்றி தெரிவிப்பு



(கொழும்பு)

செஞ்சோலை சிறார் படுகொலையைக் கண்டித்து தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமைக்கு நாடாளுமன்றத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவசர காலச் சட்ட நீடிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் தி.மகேஸ்வரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கை விடயத்தில் ராஜீவுக்குப் பின்னர் தமிழக மக்கள் தலையிட மாட்டார்கள் என்ற எண்ணம் தவிடுபொடியாகியுள்ளது.

தமிழகச் சட்டப் பேரவையில் செஞ்சோலை படுகொலைக்காக அஞ்சலி செலுத்தியமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம் என்றார் தி. மகேஸ்வரன்.

இவ்விவகாரத்தில் மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் பேசியதாவது; இலங்கையில் பூனைக்கு விளையாட்டு எலிக்கு மரணம் என்ற நிலைமைதான் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது. தமிழர்களைக் கொல்லவும் கடத்தவுமே அவசரகாலச் சட்டத்தைக் கொண்டுவந்துள்ளீர்கள்.

அநுராதபுரத்திற்கு மூதூர் வழக்கு விசாரணை மாற்றப்பட்டுள்ளது ஏன் என்று தெரியவில்லை. கொழும்பில் தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றால் கொடுங்கோல் அரசாங்கம்தானே நடைபெறுகிறது என்றார் மனோ கணேசன். (ச-5)




கொழும்பில் இராணுவத்தினரால் வாகனங்கள் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டன. சோதனைக்குட்படுத்தப்படும் கார் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுத்து உண்டு பல்லுயிர் ஒம்புதல்
நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.
-திருவள்ளுவர்.

வலம்புரி

## பதுக்கல் செய்த பொருட்களை வெளியில் கொண்டு வாருங்கள்

யாழ்.குடாநாட்டில் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. ஏழைக் குடும்பங்கள் ஒரு நேர உணவுக்கும் வழியின்றி அல்லப்படும் பரிதாபம் பெரும் துன்பத்திற்குரியது.

'பக்கத்திருப்பவன் துன்பம் தன்னைப் பார்க்கப் பெறாதவன் புண்ணியமூர்த்தி' என்ற பாரதியின் பாடல் வரிகளை யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்து மக்களும் தங்கள் சிந்தனையில் கொள்ள வேண்டும்.

குறிப்பாக பொருட்களைப் பதுக்கி வைத்திருக்கும் வர்த்தகர்கள் அவற்றை வெளியில் கொண்டு வந்து மக்களுக்கு விநியோகிப்பது அவர்களின் தார்மீகக் கடமையாகும்.

மக்கள் பட்டினியால் வாடும் நிலையில் கொள்ளை லாபம் ஈட்ட நினைப்பது அறமன்று. பொருளீட்டுவதிலும் அறம் கடைப்பிடிக்க வேண்டும் என்ற உயரிய பண்பாட்டின் உரிமைக்காரர்களாகிய நாம், அதிலிருந்து விலகாது இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

'வயிற்றுக்கு சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்ற பாரதியின் பாடல் நினைவுக்குரியன.

தர்மம், புண்ணியம், நீதி என்ற உயரிய பதங்கள் நம் சிந்தனையில் நிற்பதற்குரிய காலமிது.

மக்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்ற வேண்டிய அரசு, யாழ்ப்பாணத்தில் பொருட் தட்டுப்பாடு இல்லை எனக் கூறுகிறது.

ஆனால் இங்கோ அரிசிக்கும் மாவுக்கும் சீனிக்கும் மக்கள் அலைகின்றனர். ஒவ்வொரு விடியற் பொழுதிலும் இன்று உணவுக்கு என்ன செய்வதென்று ஏங்கும் பெற்றோர்கள்- அம்மா பசிக்கின்றது எனக் கண்ணீர் வடிக்கும் சின்னஞ்சிறுசுகள்.

இதனை கண்டும் கேட்டும் அனுபவித்த பின்னரும் 'பதுக்கல்' செய்வது மிகப் பெருங் கொடுஞ்செயலாகும்.

எனவே அன்புக்குரிய வர்த்தகர்களே! பட்டினிச்சாவில் லாபம் வேண்டாம். பகுத்து உண்போம். பசியாறுவோம். இருக்கும் வரை அதைச் செய்வோம். இறைவன் எமக்கு நிச்சயம் உதவுவான்.

நான் மட்டும் உண்டு உறங்குவது மக்கள் வாழ்வன்று. அது மாக்கள் வாழ்வாகும். எனவே உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்திருப்பவர்கள் யாழ்.குடாநாட்டு மக்களின் அவல நிலையை உணர்ந்து அவற்றைப் பங்கீட்டு அடிப்படையில் வழங்குவதற்கு முன்வரவேண்டும்.

கூடவே பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களை அம்பலப்படுத்துவதும் மக்களின் தார்மீகப் பொறுப்பாகும்.

# நாட்டில் சமாதானம் வேண்டி திருமலையில் அமைதிப் பேரணி

(திருகோணமலை)

நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ வேண்டும் என்பதை வலியுறுத்தி திருகோணமலையில் அமைதிப் பேரணி நேற்று நடைபெற்றது.

இப் பேரணியில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு பிரார்த்தித்தனர். திருகோணமலை குவாடலூப்பே மாதா தேவாலயப் பங்கு மக்களின் ஏற்பாட்டில் இந்த அமைதிப் பிரார்த்தனை நடைபெற்றது.

இவ் செபமாலை பாதயாத்திரையில் கலந்து கொண்ட மக்கள் நாட்டில் அமைதி ஏற்பட வேண்டும் என பிரார்த்தித்தனர்.திருகோணமலை, மட்டக்களப்பு ஆயர் பேரருள் திரு. கிங்ஸிலி சுவாம்பிள்ளை அடிகளார், குவாடலூப்பே மாதா ஆலய பங்குத் தந்தை கிறைற்றன் அடிகளார் உட்பட அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

செல்வநாயகபுரம் வடக்கு அந்தோனியார் ஆலயப் பகுதியிலிருந்து ஆரம்பமான இவ் அமைதிப் பேரணி குவாடலூப்பே தேவாலயத்தை சென்றடைந்தது. அங்கு பிரார்த்தனைகள் இடம்பெற்றது.

நாட்டில் வன்முறைகள் ஒழிந்து அமைதி நிலவ வேண்டுமென்று மக்கள் தமிழ், சிங்கள மொழிகளில் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (ச)

# இலங்கை அரசியல் செயற்பாட்டில் இந்திய அரசு தலையிடக் கூடாது

## அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

இலங்கை அரசியலில் இந்தியத் தூதுவர் நிரூபமாராவ் தலையிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டுமென சுற்றுலாத் துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார். நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக்கூற்றுக்கு இந்திய அரசு விளக்கமளித்துள்ளது. அது தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சு செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசியல் செயற்பாட்டில் இந்தியத் தூதுவர் நிரூபமாராவ் தலையிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இக் கூற்றுக்கு இந்திய அரசு விளக்கமளித்துள்ளது. அது தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சு செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசியலில் இந்தியத் தூதுவர் நிரூபமாராவ் தலையிடுவதை சுற்றுலாத் துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க விமர்சனம் செய்துள்ளார். இனப்பிரச்சினைக்குத் அரசியல் வழித் தீர்வுதான் காணப்படவேண்டும்.இராணுவ நடவடிக்கை தேவையில்லை.

தற்போது புலியைக் காயப்படுத்தியிருக்கிறீர்கள். புலியைக் காயப்படுத்தினால் அது மிகவும் ஆபத்தானது. ஏனெனில் அது திருப்பித் தாக்கும். ஏழு ஆண்டு கால ஆட்சிக்குப் பின்னர் சர்வதேச தலைவர் பட்டியலில் 32 ஆம் இடத்திலிருந்து 63 ஆம் இடத்திற்கு ஜோஜ் புஷ் தள்ளப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஆண்டு யூலை மாதத்தில் ரொனி பிளேயர் பொறுப்பிலிருந்து விலகவுள்ளார். ஈராக் மீதான ஆக்கிரமிப்பின் நடவடிக்கையால் அவர்களது மதிப்புக் குறைந்து விட்டன.

இனப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களும் ஒரு முக்கியமான அங்கம். 1938 ஆம் ஆண்டே கூட்டரசு முறையை பண்டாரநாயக்க வலியுறுத்தினார். கூட்டரசு முறையை வலியுறுத்திய முதல் சிங்களவர் அவர்.

சம்பூரைக் கைப்பற்றியிருக்கலாம். ஆனால் அதைத் தக்க வைக்கத் திறமையோடு இருக்க வேண்டும். பாகிஸ்தானிய முன்னாள் தூதுவர் பசீர் வாலி மொகமெட் தன்மீதான தாக்குதலுக்கு இந்திய றோவைக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எவ்வித ஆதாரமும் இல்லாமல் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இலங்கை அரசியலில் இந்தியத் தூதுவர் நிரூபமாராவ் தேவையில்லாமல் தலையிடுகிறார். எமது நாட்டை நாம் பார்த்துக் கொள்ளுகிறோம். நீங்கள் உங்கள் தூதரகப் பணியைப் பார்க்கவும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தக் காலத்தில் முன்னைய இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்சிற் நடவடிக்கையால் ராஜீவ்காந்தியை விலை கொடுக்க நேரிட்டது.

அரசாங்கம் யாருடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பதை இந்தியத் தூதுவர் கூறக்கூடாது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட மகிந்த ராஜபக்ஷ ஏற்கனவே முடிவு செய்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவும் புத்திசாலித்தனமாக இந்த நட்புறவை அங்கீகரிப்பார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என்றார் அநுரா பண்டாரநாயக்க. (ச)

# அரசாங்கத்துடன் இணைந்து கொண்டமைக்கு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் விளக்கம்

(கொழும்பு)

நாங்கள் மலையகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறோம். எனவே எமது மக்களுக்கு நன்மையானவை குறித்து நாம் சுயாதீனமாகத் தீர்மானங்களை மேற்கொள்கிறோம். எனவே எமது அரசியல் நடவடிக்கைளில் அழுத்தங்கள் வழங்குவதற்கு எவருக்கும் எந்த உரிமையும் இல்லை. இவ்வாறு தெரிவிக்கிறார் இலங்கைத் தொழிலாளர் காங்கிஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான்.

அரச கட்டுப்பாட்டில் இயங்கும் தினமினப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே மேற்படி கருத்துக்களை அவர் வெளியிட்டுள்ளார். அவர் மேலும் கூறியிருப்பதாவது;

அமைதி முயற்சிகளுக்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பினை அரசுக்கும் ஜனாதிபதிக்கும் வழங்குவதற்காகவே நாம் அரசிடம் இணைந்தோம்.

அதேபோல் மலையக மக்களுக்குத் தேவையான அபிவிருத்தி மற்றம் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை செய்து கொள்வதும் நாம் அரசுடன் இணைவதற்கு ஏதுவாயிற்று.

இன்னுமொரு விடயத்தை இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். நாம்அரசுடன் இணைய எடுத்த தீர்மானம் அவசரமாக எடுத்த முடிபல்ல. கடந்த பெப்ரவரி முதல் அரசுடன் நடத்திய கருத்துப் பரிமாற்றங்களின் பிரதிபலனாகவே இது ஏற்பட்டது. எனவே இது அவசரமாக எடுத்த முடிபல்ல. அவசரமான மாற்றமும் அல்ல.

நாம் பொறுப்புடன் அரசியலில் ஈடுபடுகின்றோம்.தனிப்பட்ட காரணங்களால் நாம் எந்த முடிபையும் எடுப்பதில்லை. மக்களின் நலன்களை முன்வைத்தே நாம் எப்போதும் செயற்படுகின்றோம்.

அரசு யுத்தத்தை நோக்கி செல்வதாகக் கூறுவது தவறு. அப்படி ஒரு நிலைமை இருக்குமாயின் இதர கட்சிகள் அதனை நிறுத்தும் வகையிலான நீதியான தீர்வு ஒன்றுக்காக அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ச-5)

# மன்னாரிலும் உணவுப் பொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது

(மன்னார்)

மன்னாரில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதி கிராம மக்களுக்கான உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஓகஸ்ட் 11 ஆம் திகதி இராணுவத்தினரால் உயிலங்குளம் சோதனைச் சாவடி மூடப்பட்டதையடுத்து தனியார் வர்த்தகர்கள் அப் பிரதேசங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்ல முடியாத நிலை உருவாக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் நிர்வாகக் கிராமங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் உணவுப் பொருட்களின் கையிருப்பு சில நாட்களுக்கு மட்டுமே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய பொருட்களை அரச தரப்பில் அனுப்பி வைப்பதற்கான எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறப்படுகின்து.

உயிலங்குளம் சோதனைச் சாவடி நாலு முறை தற்காலிகமாக திறக்கப்பட்ட போதும் அத்தியாவசியப் பொருட்களை வர்த்தகர்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்சன் பாம் நிறுவனம் பணிகளை நிறுத்துகிறது

(கொழும்பு)

பிரான்ஸ் அக்சன் பாம் தொண்டு நிறுவனம் 17 உள்ளூர் தொண்டர்கள் படுகொலை செய்யப்பட்டமையையடுத்து தனது சுனாமி நிவாரண மீள்கட்டமைப்பு பணிகளை இலங்கையில் மட்டுப்படுத்தபடவுள்ளதாக அந் நிறுவனத்தின் பிரதம அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் மாறிமாறி படுகொலை தொடர்பாக குற்றம் சாட்டி வருகின்றனர். எனினும் ஐ.நா.சாதாரண கண்காணிப்பாளர்கள் இப் படுகொலைக்கு இராணுவமே காரணம் எனத் தெரிவித்துள்ளது.

மேலும் அக்சன் பாம் தொண்டு நிறுவனம் தனது உள்ளூர் தொண்டர்களை 200 இலிருந்து 50 ஆகவும் வெளிநாட்டில் தொண்டர்களை 15 இருந்து 7 அல்லது எட்டாக தற்போது குறைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

அதேவேளை 17 தொண்டர்கள் படுகொலை தொடர்பான வழக்கு திருகோணமலை நீதி மன்றத்திலிருந்து அநுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ச)

# வர்த்தகக் கப்பல் கடலில் மூழ்கியது

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதிக் கடலில் கப்பல் ஒன்று மூழ்கியுள்ளது. அதில் பயணித்த 34 பேர் கடற்படையினரால் மீட்கப்பட்டு காலித்துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

மியான்மார் யங்கோண் துறைமுகத்திலிருந்து மும்பாய் நோக்கி புறப்பட்ட இவ் வர்த்தகக் கப்பல் அம்பாறை கடற்பரப்பில் இயந்திரக் கோளாறுகாரணமாக பழுதடைந்தது.

இதனையடுத்து மற்றொரு கப்பலின் உதவியுடன் கொழும்புத்துறை முகத்துக்கு அக் கப்பல் கொண்டு செல்லப்பட்டது.

அப்போது காலியில் பாரிய கடலலையில் சிக்கி கப்பல் விபத்துக்குள்ளானது. அக் கப்பல் நீரில் மூழ்கத்தொடங்கிய நிலையில் அதில் இருந்த இரு குழந்தைகள் உட்பட34 பேர் மீட்கப்பட்டனர். (ச)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்கியது

(கொழும்பு)

1981-1984 வரையான காலப்பகுதியில் இடம் பெற்ற இன வன்முறைகளால் பாதிக்கப்பட்ட 50 பேரிற்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் 2 இலட்சம் முதல் 6 இலட்சம் வரை நஷ்டஈடு வழங்கியுள்ளதாக நாட்டை கட்டியெழுப்பும் மற்றும் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்தது.

இன வன்முறையால் அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு இந்த நஷ்டஈட்டினை வழங்க அனுமதியளித்துள்ளது.

இந்த ஆணைக்குழு வழங்கிய அறிக்கையில் 3 ஆயிரத்து 407 பேரிற்கு நஷ்டஈடுவழங்க வேண்டும் என சிபாரிசு செய்துள்ளது. (ச)

# வேலணையிலிருந்து மக்கள் இடம் பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகம் வேலணையிலிருந்து யாழ்ப்பாணம் நகரத்துக்கு நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இடம் பெயர்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு பெயர் குறிப்பிடப்படாத சுவரொட்டி மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து புதன்கிழமை நள்ளிரவில் பெருந்தொகையான மக்கள் யாழ்.நகருக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

மண்டை தீவு,அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்துள்ளனர். (ச)

# சம்பூர் பிரதேசத்திற்கு நேற்று ஊடகவியலாளர்கள் சென்றனர்

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ள சம்பூர் பகுதிக்கு நேற்று ஊடகவியலாளர்கள் அழைத்து செல்லப்பட்டனர். சம்பூரை கைப்பற்றிய பின்னர் அங்கு நிலைகள் உறுதிப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இந் நிலையிலேயே ஊடகவியலாளர்கள் நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

கட்டைப்பறிச்சான் பகுதியில் இருந்து சுமார் 4 கிலோ மீற்றர் சம்பூர் பகுதிக்கு அழைத்து செல்லப்பட்டு தமக்கு காண்பிக்கப்பட்டதாக சம்பூருக்கு சென்ற ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பூர் பிரதேசம் முழுமையாக மக்கள் சூனியப்பிரதேசமாக காணப்படுகிறது. தாக்குதல்களால் பாதிக்கப்பட்டிருந்த தமிழீழ வைப்பகம் மற்றும் கடற்புலிகளின் தளம் என்பவை படையினரால் ஊடகவியலாளர்களுக்கு காண்பிக்கப்பட்டன என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சம்பூர் பகுதியில் வெளியேறிய தமிழீழ விடுதலைப்புலிகளின் வாகரை பிரதேசத்தில் தங்கியுள்ள நூறு வீதமான மக்களையும் மீளக்குடியமர்த்தும் முகமாக கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் இடம் பெற்றுக் கொண்டிருப்பதாக இராணுவத்தினர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தனர். (ச-5)

# மூதூரில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனர்

(திருகோணமலை)

மூதூரிலிருந்து கந்தளாய்ப் பிரதேசத்திற்கு இடம் பெயர்ந்த முஸ்லிம்களில் பெரும்பாலானோர் நேற்று தமது சொந்த இடங்களிற்குத் திரும்பியதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மூதூரில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையே ஏற்பட்ட மோதலையடுத்து அங்கிருந்து 7 ஆயிரம் குடும்பங்கள் கந்தளாய்க்கு இடம் பெயர்ந்தனர்.

இவர்களில் ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் தமது இடத்திற்குத் திரும்பியுள்ளனர். இதேவேளை இன்று 120 பஸ்களில் இடம் பெயர்ந்த மக்கள் மூதூரிலிருந்து ஏற்றிச் செல்லப்படவுள்ளனர்.

நேற்றும் சுமார் 120 பஸ்களில் மக்கள் அழைத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. மழைகாலம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந் நிலையில் அவர்கள் சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## மனித...

நாடுகள் பிரச்சினை தீர்ந்த பின்யுத்த உடன்படிக்கைக்கு வரும் முன்னர் மனித உரிமைகள் தொடர்பான பொது உடன்பாட்டிற்கு வந்துள்ளன. இவ்வாறு வரும் போது சர்வதேச நாடுகளின் வழிகாட்டுதல்கள் எமக்கு பயனுள்ளவையாக அமையும் என அங்கு உரையாற்றிய கலாநிதி பாலித கொஹன்ன தெரிவித்தார். (ச-5)

## புனர்வாழ்வுக்கழக...

அண்மைக்காலமாக தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இடம் பெற்று வருகின்ற இராணுவத்தின் நகர்வு முயற்சிகளுக்கிடையிலான மோதல்கள் ,விமானக் குண்டுவீச்சுத்தாக்குதல்கள் , எறிகணை வீச்சுத்தாக்குதல்கள் போன்ற சம்பவங்களால் நாளாந்தம் மக்கள் எதிர்நோக்கி வரும் அவலங்கள் குறித்தும் இடம் பெயர்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களின் மீள்வாழ்வுப் பணிகளை முன்னெடுப்பதிலுள்ள நிதி,பொருளாதார , போக்குவரத்துத் தடைகள் மற்றும் ஏனைய நெருக்கடிகள் பற்றியும் தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதிநிதிகளால் இச் சந்திப்பின்போது விளக்கப்பட்டுள்ளது. (ச)

## இலங்கைக்கான...

போர்முறை,புலானாய்வுத் தகவல்கள் மற்றும் பயிற்சிகளை வழங்கவுள்ளதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் இலங்கை முப்படையினருக்கு வழங்கப்படும் பயிற்சி நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ள பாகிஸ்தான், தமிழீழ விடுதலைப் புலிகளை போரியல் ரீதியில் தோல்வி அடையச் செய்யவேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக்கு பாகிஸ்தான் இராணுவ ரீதியில் உதவுவதை முன்னிட்டு இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. (ச-7)

## ஜே.வி.பியுடன்...

முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையே முக்கிய மாநாடு குறித்து விரைவில் நடத்தப்படவுள்ளதாக அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## பாடசாலை...

கல்விக்கும் தடைபோடும் செயலாகவே நாம் எண்ணவேண்டியுள்ளது.

ஏ-9 வீதி திறக்கப்படும் வரை நாங்கள் பாடசாலைகளை பகிஷ்கரிக்க வேண்டுமென மாணவர் ஒன்றியத்தின் பெயரால் வேண்டு கோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

ஏ-9 வீதி மூடப்படுவதற்கு காரணமாக இருந்த, குழப்பங்களிற்கும் பதற்ற சூழலுக்கும்யுத்த முனைப்புகளும் இது போன்ற பாடசாலைப் பகிஷ்கரிப்புகளுமே ஆரம்பத்தி லும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

கல்விச்சமூகத்தை அச்சுறுத்தி-பலாத்கார மாக மாணவர்களை பகிஷ்கரிப்புகளில் ஈடு படுத்தி - இராணுவத்தினரின் சோதனைச்சா வடிகளுக்குக் கல்லெறிந்து-பின் குண்டெறிந்து -வீதிகளில் ரயர் கொளுத்தி- மாணவர் களின் பெயரால் இராணுவத்தினருக்கு எச்ச ரிக்கை விடுத்து, இவ்வாறு தொடங்கிய பதற்ற சூழலில் இருந்து திட்டமிட்டு உருவாக்கப்பட்ட துதான் அண்மைகால பாரிய போர் அனர்த் தம். இதுவே ஏ-9 வீதி மூடப்படுவதற்கு காரணமாக இருக்கிறது.

மாணவர்கள் ஒன்றியத்தின் பெயரால் விடுக்கப்படும் குழப்பம் விளைவிக்கும் திட் டங்களுக்கு மாணவர்களாகிய நாம் எடுபட வேண்டுமா?

எமது கல்வியை படுகுழி தோண்டும் செயலுக்கு நாமே ஆயுதங்களாக பயன்பட வேண்டுமா? மறுபடியும் நடாத்தத் திட்டமிட்டிருக்கும் குழப்பங்களுக்கும் பதற்றங்களுக் கும் நாம் பலியாகவேண்டுமா?

தங்களது வன்முறை அரசியலுக்காக எங்களை ஆயுதங்களாக பயன்படுத்துவதை நாம் அடியோடு வெறுக்கின்றோம். ஆகவே சக மாணவ மாணவிகளே! கல்விச்சமூகத்தி னரே! தனிப்பட்ட உள்நோக்கம் கொண்ட திட் டங்கள் எதுவாக இருப்பினும் அதற்கு மக்க ளை பகடைக்காய்களாக பயன்படுத்துவதை நாம் முழுமையாக எதிர்ப்போம். பாடசாலைப் பகிஷ்கரிப்புக்களை நிராகரித்து நாம் எமது கல்வியைத் தொடருவோம்.

ஏ-9 வீதியைத் திறப்பதற்கான அணுகு முறைகள் நிறையவே உண்டு. அவைகளை வேறு வழிகளில் சம்பந்தப்பட்டவர்கள்கையாளட்டும்.மாணவர்களை தூண்டிவிட்டு பகிஷ்கரிப்பு நடத்தும் அணுகுமுறை என்பது ஏ-9 வீதியைத் தொடர்ந்தும் மூடிவைத்திருக்கவே வழி வகுக்கும்.

இயல்பு வாழ்க்கையை சீர்குலைக்கும் திட்டமிட்ட செயலே பாடசாலைப் பகிஷ்கரிப்பு என்பதை உரத்துச்சொல்வோம். பாடசாலைப் பகிஷ்கரிப்பை நிராகரித்து ஐக்கியப்பட்டு அனைவரும் எமது கல்வியை தடையின்றி தொடர்வோம் என அவ்வறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. (ச-5)


## கலாலயா பயிற்சியகம்

மறு அறிவித்தல் வரை நாள் வகுப்புக்கள் திங்கள்,செவ்வாய் ஆகிய தினங்களிலும் வார இறுதி நாள் வகுப்புக்கள் சனிக்கிழமைகளிலும் மட்டுமே நடைபெறும்.

இயக்குனர்.

(C-140)



## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## அவசர கலந்துரையாடல்

சகல வெதுப்பக உரிமையாளர்களையும் 09.09.2006 சனிக்கிழமை அன்று காலை 11.00 மணிக்கு சங்கத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். சில முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடவேண்டி இருப்பதால் குறித்த நேரத்திற்கு அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

*குறிப்பு:-* வெதுப்பக உரிமையாளர்களும் தங்களால் உற்பத்தி செய்யப்படும் 450 கிராம் பாண் ரூபா 28.00க்கு விற்பனை செய்யப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

நிர்வாகம்.

(C-139)


இப்பத்திரிகை வலம்புரி அச்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08 .09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org